( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-03

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..........................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  * மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
  * இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
  * எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
  * விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  * விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
  * செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

கானகம் எங்கும் சூழ்ந்துள்ள அமைதியைப் பறவைகளின் நாதம் கலைக்கின்றது. அங்குமிங்கும் செல்லும் மயில்களால் கானகம் வண்ணமயமாகிறது. மான் கூட்டம் குளக்கரையில் நீரைப்பருகுகின்றது. மரஞ்செடிகொடிகள் நிறைந்த சூழலை தழுவிச் செல்லும் தென்றல் உடலுக்கு குளிர்ச்சியைத் தருகிறது.

(i) பந்தியிலுள்ள இணைமொழி ஒன்றை எழுதுக. ..........................................

(ii) குளக்கரை என்பதை பிரித்து எழுதுக. ..........................................

(iii) விசிறியும் சுழியும் வந்துள்ள சொல்லை எழுதுக. ..........................................

(iv) "காற்று" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........................................

(v) கானகத்தைச் சூழ்ந்துள்ள அமைதி கலைவதற்கான காரணம் யாது? ..........................................

**(02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்திற்கு பயனிலை அடைமொழி, செயப்படுபொருள் அடைமொழி சேர்த்து வாக்கியத்தை மீண்டும் எழுதுக.**

பிள்ளை நீரைக் குடித்தது :- ..........................................

**(03) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) இன்று வகுப்பில் .................... (களித்தல் , கழித்தல்) கணக்குச் செய்தோம்.

(ii) வானம் எங்கும் மேகக்கூட்டங்கள் .................... (பரந்து , பறந்து) காணப்பட்டன.

**(04) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

(i) கையுறை :- .................... (ii) சிற்றூர் :- ....................

**(05) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான இரட்டைக்கிளவியைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) கோயில் மணி .................... (விண்விண் , கணீர்கணீர்) என ஒலித்தது.

(ii) பம்பரம் .................... (கிறுகிறு , படபட) எனச் சுற்றியது.

**(06) பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக எழுதுக.**

(i) கமலா காலையில் எழுந்தாள். (ii) கமலா கடவுளை வணங்கினாள்.

..........................................

**(07) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியாக எழுதப்பட்டிருப்பின் ( ✓ ) எனவும், பிழையாக எழுதப்பட்டிருப்பின் ( X ) எனவும் வாக்கியத்திற்கு எதிரேயுள்ள அடைப்பினுள் அடையாளமிடுக.**

(i) அம்மா பண்டிகைப் பலகாரங்களை அன்போடு எங்களுக்குப் பரிமாறினார். ( )

(ii) அனுலாவும் பாரதியும் நன்றாக நடனமாடினான். ( ) (iii) வானம் இருண்டு மழை பொழிந்தது. ( )

**(08) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு மரபுத் தொடருக்கும் பொருத்தமான கருத்தைத் தரப்பட்டுள்ள அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து உரிய வெற்றிடத்தில் எழுதுக.**

( உணர்ச்சியடைதல் , சொன்ன சொல் தவறுதல் , அறிவு உண்டாதல் , வெட்கமடைதல் )

(i) தலை கவிழ்தல் :- .................... (ii) நாக்குப் புரளுதல் :- ....................

kalvi.lk

(09) **கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.**

( இரவு , மூக்கு , ஊர் , உணவு , சிரித்தல் )

(i) இடப்பெயரை எழுதுக. ..................................................  (ii) தொழிற்பெயரை எழுதுக. ..................................................

(iii) காலப்பெயரை எழுதுக. ..................................................

(10) **பின்வரும் பந்தியில் இடம்பெற்றுள்ள மூன்று சொற்களில் எழுத்துக்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன. அச்சொற்களை இனங்கண்டு புள்ளிக்கோட்டின் மீது திருத்தமாய் எழுதுக.**

நாம் பண்டிகைகளைக் கொண்டாடும்போது எமது உடலையும் வீட்டையும் தூய்மைப்படுத்தல், அளகுபடுத்தல், புத்தாடையணிதல், சிற்றுண்டி தயாரித்து மகிழ்தல், உரவினர் நண்பர்களுடன் கூடி உறவாடுதல், கூடி உண்ணுதல் போன்ற செயற்பாடுகளில் ஒன்றிணைந்தே ஈடுபடுகின்றோம்.

(i) ..................................................  (ii) ..................................................  (iii) ..................................................

(11) **கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

(i) Pencil? / Is / your / this :- ..................................................

(ii) has / ears / two / It :- ..................................................

(12) **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

இது எனது வீடு. :- ..................................................

(13) **பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்தை எழுதுக.**

(i)  :- Flo........er  (ii)  :- Fl......g

(14) **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

இங்கே வாருங்கள். :- ..................................................

(15) **பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

பொ(த்)த தியெனவா :- ..................................................

(16) பின்வரும் திண்மங்களுக்கு ஒவ்வொரு உதாரணம் வீதம் எழுதுக.

(i) கனவுரு :- ..................................................  (ii) உருளை :- ..................................................


(17) அருகேயுள்ள எண்ணை விரித்து எழுதுக.

6574 = ........................ + ........................ + ........................ + ........................

(18) 7936 எனும் எண்ணில்,

(i) இலக்கம் 7 இனால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் யாது? ..................................................

(ii) இலக்கம் 9 அமைந்துள்ள இடம் யாது? ..................................................

(19) 


5 மணிக்கு 20 நிமிடங்கள் என்பதை இக்கடிகார முகத்தில் வரைந்து காட்டுக. (மணித்தியால முள், நிமிட முள் என்பவற்றைத் தெளிவாக வரைக.)

(20) கீழே தரப்பட்டுள்ள உரோம எண்குறிகளை இந்து அராபிய எண்குறிகளில் எழுதுக.

(i) **X** = ..................................................  (ii) **VI** = ..................................................

(21) பெட்டியொன்றில் நீல நிறப் பந்துகள் 4 உம், சிவப்பு நிறப் பந்துகள் 3 உம், மஞ்சள் நிறப் பந்துகள் 5 உம் உள்ளன. அதன்படி, அவ்வாறான 6 பெட்டிகளில் இருக்கும் பந்துகளின் மொத்த எண்ணிக்கை யாது? ..................................................

(22) குறித்த ஒரு எண்ணை 3 இனால் வகுக்கும்போது விடை 12 ஆகும். அதன்படி, அவ்வெண்ணை 6 இனால் வகுக்கும்போது வரும் விடை யாது? ..................................................

(23) 

இக்கனவுருவின்,

(i) பக்கத்தோற்றத்தில் காணப்படும் ஆங்கில எழுத்து யாது? ..................................................

(ii) திட்டத்தில் காணப்படும் ஆங்கில எழுத்து யாது? ..................................................


(24) மு.ப 11:30 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட அப்பா மீண்டும் வீட்டிற்கு பி.ப. 7.00 மணிக்கு வந்தார். அவர் வீட்டிற்கு வெளியே செலவிட்ட காலத்தை எழுதுக. ..................................................

(25) | 3 | | 9 | | 6 | | 8 | இங்கு காட்டப்பட்டுள்ள நான்கு தார்ப்போர்ட் அட்டைகளையும் பயன்படுத்தி அமைத்துக்கொள்ளக்கூடிய மிகப்பெரிய எண்ணைச் சொற்களில் எழுதுக. ..................................................

Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

சுட்டெண்:-..................................

(26) பழ வியாபாரி ஒருவரிடம் ஒவ்வொரு வகையிலும் உள்ள பழங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களைப் பின்வரும் வரைபு காட்டுகிறது. அதன்படி, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.




(i) வியாபாரியிடம் உள்ள அப்பிள் பழங்களின் எண்ணிக்கை 12 எனின், அதனை வரைபின் உரிய நிரலில் நிழற்றிக் காட்டுக.


(ii) வியாபாரியிடம் சமனான எண்ணிக்கையில் உள்ள பழ வகைகள் இரண்டும் யாவை? ..............................

(iii) வியாபாரியிடம் உள்ள பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

(27) (i) 1 கிலோகிராம் பருப்பின் விலை ரூபாய் 150.00 ஆகும். எனின், 200 கிராம் பருப்பின் விலை யாது? ..............................

(ii) அனில் ஒரு பழம் ரூபாய் 3.50 வீதம் 4 ரம்புட்டான் பழங்களைக் கொள்வனவு செய்து வியாபாரிக்கு ரூபாய் 50.00 நாணயத் தாளொன்றைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ..............................

(28) பாத்திரம் A யில் $4l\ 500ml$ பால் உள்ளது. பாத்திரம் B யில் A பாத்திரத்திலுள்ளதை விட $1l\ 500ml$ பால் கூடுதலாக உள்ளது. அதன்படி, இரு பாத்திரங்களிலும் உள்ள பாலின் மொத்த அளவு யாது? ..............................

(29)  உருவில் எல்லாப் பக்கங்களும் நீளத்தில் சமமான முக்கோணி ஒன்று காட்டப்பட்டுள்ளது. இதன் சமச்சீர் அச்சுக்களை வரைந்துக் காட்டுக.

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) தோடை மற்றும் எலுமிச்சையில் அதிகம் அடங்கியுள்ள விற்றமின்,
(1) விற்றமின் B (2) விற்றமின் C (3) விற்றமின் A

(31) பூக்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுவது,
(1) தேனீ (2) வீட்டு ஈ (3) நுளம்பு

(32) பிரிந்த இலைகளைக் கொண்ட தாவரம் அல்லாதது,
(1) முடக்கொத்தான் (2) வெண்டி (3) மிளகு

(33) இலங்கையின் தேசியக் கொடியில் காணக்கிடைக்கும் மூல வர்ணங்களின் எண்ணிக்கை,
(1) 3 (2) 2 (3) 1

(34) மழைவீழ்ச்சியை அளப்பதற்கு மழைமானியை வைக்க வேண்டியது,
(1) மைதானமொன்றின் நடுவிலாகும். (2) மரமொன்றின் கீழாகும். (3) கூரையிலிருந்து நீர் ஒழுகும் இடத்திலாகும்.

(35) வெளவால் பற்றிய தவறான கூற்றைத் தெரிவு செய்க.
(1) வெளவால் குட்டியீன்று பாலூட்டும் பறக்கும் பிராணியாகும்.
(2) வெளவால் தாவரங்களின் வித்துப் பரம்பலுக்கு உதவும் பிராணியாகும்.
(3) வெளவால் மிக அழகான கூட்டைக் கட்டும் பிராணியாகும்.

(36) கடற்கரை மணலில் குழிதோண்டி முட்டையிடும் பிராணி,
(1) முதலை (2) கடலாமை (3) ஆமை

(37) 6 இதழ்களைக் கொண்ட பூ,
(1) நாகலிங்கம் (2) நாமலர் (3) சூரியகாந்தி

(38) இலங்கைக்குச் சொந்தமான மிகப்பெரிய தீவு,
(1) டெல்ப்ட் (2) இரணைதீவு (3) தலைமன்னார்

(39) தென்னை மரத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ளாதது,
(1) கள்ளு, எண்ணெய் (2) சீனி, உப்பு (3) வினாகிரி, பாணி

(40) 

உருவில் காட்டப்பட்டுள்ள தேசிய வீரர்,
(1) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி (2) கலாநிதி ரீ. பீ. ஜாயா
(3) கலாநிதி சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா

kalvi.lk

(41) 

இலங்கை தேசப்படத்தில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ள மாகாணம்,

(1) சப்ரகமுவ மாகாணம் (2) ஊவா மாகாணம் (3) மத்திய மாகாணம்

(42) கம்மாலைத் தொழிலுக்குப் பயன்படுத்தும் உபகரணம்,

(1) பட்டடை (2) செக்கு (3) வனைச்சில்லு

(43) ஆபத்தின்போது தமது உடலிலுள்ள ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறும் பிராணிகள்,

(1) முள்ளம்பன்றி, குளவி (2) அட்டை, தேனீ (3) ஆமை, நத்தை

(44) நீரைத் தூய்மையாக்குவதற்கு நீரினுள் இடப்படும் இரசாயனப் பொருள்,

(1) அயடீன் (2) குளோரீன் (3) உப்பு

(45) உள்ளூர் தபால்களை இட வேண்டிய தபால் பெட்டியின் நிறம்,

(1) சிவப்பு (2) நீலம் (3) பச்சை

(46) இரண்டு வர்ணங்களைக் கலப்பதன் மூலம் தயாரித்துக்கொள்ளக்கூடிய வர்ணம்,

(1) செம்மஞ்சள் (2) நீலம் (3) சிவப்பு

(47) ஊர்ந்து செல்லும் பிராணிகள்,

(1) பன்றி, பூனை (2) அட்டை, முதலை (3) வாத்து, மீன்

(48) எம்பக்கை தேவாலயம் மிகவும் பிரசித்தி பெற்றது,

(1) மரச்செதுக்கல் வேலைப்பாடுகளுக்கு (2) சுவரோவியங்களுக்கு (3) கல்வேலைகளுக்கு

(49) தைக்கும்போது விரல்களின் பாதுகாப்பிற்காக அணியப்படுவது,

(1) இடுக்கி (2) துருத்தி (3) தீதாள்

(50) வாசனை கொண்ட பூ வகை,

(1) போகன்விலா (2) பவள மல்லிகை (3) அந்தூரியம்

(51) உணவுப் பொருட்களைப் பொதி செய்யப் பயன்படுத்தப்படும் தாவர இலை அல்லாதது,

(1) வட்டக்கண்ணி (2) தாமரை (3) மாதுளை

(52) காகத்தினால் சூழலுக்கு ஆற்றப்படும் பணி,

(1) குப்பைகூளங்களை உண்பதன் மூலம் சூழலைச் சுத்தம் செய்யும்.

(2) குப்பைகூளங்கள், மரங்கள் என்பவற்றை உக்கச் செய்யும். (3) தாவரங்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும்.

(53) மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் இரண்டாம் படிமுறை,

(1) உடலைத் தளர்த்துதல் (2) மனவுறுதி (3) உள்ளத்தைத் தளர்த்துதல்

(54) "பம்பரகந்த" எனப்படுவது,

(1) இலங்கையின் மிக உயரமான மலை (2) இலங்கையின் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி (3) இலங்கையின் மிகப்பெரிய காடு

(55) நீரின் மீது மிதப்பது,

(1) தேங்காயெண்ணெய் (2) வினாகிரி (3) உப்புக்கட்டி

(56) தரப்பட்டுள்ள தாவரங்களில், விலங்குகளில் தங்கியிருக்கும் தாவர வகை,

(1) துளசி (2) குப்பைமேனி (3) கெண்டித்தாவரம்

(57) அதிகளவிலான மண்சரிவு அபாயங்கள் ஏற்படக்கூடிய பிரதேசம்,

(1) நுவரெலியா (2) காலி (3) அநுராதபுரம்

(58) தேசியக் கொடியில் காணப்படும் அரச இலைகளின் வர்ணம்,

(1) செம்மஞ்சள் (2) மஞ்சள் (3) சிவப்பு

(59) காகத்தின் கூட்டில் முட்டையிடும் பறவை,

(1) குயில் (2) கிளி (3) நெற்குருவி

**(60) "நான் ஒரு தேனீயாவேன்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

kalvi.lk

(3) ..............................................................................................................

தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

தரம் ஐந்து மாணவர்களுக்கான

# முன்னோடிப் பரீட்சை - இல-03


## வினாத்தாள் - I

சுட்டெண்:- ........................................


நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
  - இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
  - ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
  - செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.


(01) முதலில் தரப்பட்டுள்ள உருச்சோடியின் தொடர்புக்குச் சமனான தொடர்புள்ள உருச்சோடியைத் தெரிவு செய்க.




(1)



(2)



(3)



(02) பின்வரும் படங்களில் உள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.




A



B



C




D



E

(1) D, C, E, A, B (2) D, A, E, C, B (3) C, A, D, E, B

(03)




இம்முக்கோண வடிவான கம்பிச்சட்டகத்தை விரிப்பதன் மூலம் அமைத்துக்கொள்ளக்கூடிய சதுர வடிவக் கம்பிச்சட்டகத்தின் ஒருபக்க நீளம்,

(1) 6cm (2) 9cm (3) 4cm


(04) கடிகாரமொன்று 2 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கும். அது ஐந்தாவது தடவையாக காலை 7.00 மணிக்கு ஒலித்தது. அதன்படி, அது 9 ஆவது தடவையாக ஒலிப்பது,


(1) பி.ப 1.00 மணிக்கு (2) பி.ப 5.00 மணிக்கு (3) பி.ப 3.00 மணிக்கு


(05) நான் புத்தகமொன்றின் 14 ஆவது பக்கத்திலிருந்து 76 ஆவது பக்கம் வரை வாசித்தேன். அதன்படி, நான் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை,

(1) 63 (2) 62 (3) 61

(06) கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு உருவிலும் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளது. அதன்படி, 3 ஆவது உருவின் வெற்றுவட்டத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.





(1) 5 (2) 4 (3) 6


(07) பொருளொன்றின் விலை ரூபாய் ஒன்பதாயிரத்து இருநூற்று முப்பத்திரண்டு ஆகும். அப்பொருளின் விலையைக் குறிக்கும் சரியான குறியீட்டினை தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

kalvi.lk

(08) உரு A யை விட உரு B யிலுள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை,


உரு A 


உரு B 

(1) 2

(2) 4

(3) 3


(09) 

எனின்,  இன் பெறுமதி,

(1) 18 (2) 20 (3) 24

(10) கடிகாரமொன்றில் நிமிட முள் 12 தடவைகள் சுழலும்போது மணித்தியால முள் சுழலும் தடவைகளின் எண்ணிக்கை,

(1) 1 (2) 6 (3) 3

* 

**இவ்வுரு சம அளவிலான சிறிய சதுர வடிவங்களினால் ஆக்கப்பட்டுள்ளது. அதன்படி, இலக்கம் (11), (12) ஆகிய வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்க.**

(11) இவ்வுருவில் காணக்கிடைக்கும் மிகப்பெரிய சதுரத்தில் உள்ள சிறிய சதுர வடிவங்களின் எண்ணிக்கை,



(1) 8 (2) 12 (3) 9

(12) இவ்வுருவில் காணக்கிடைக்கும் மிகப்பெரிய செவ்வகத்தில் உள்ள சிறிய சதுர வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 15 (2) 18 (3) 16


(13) 

இவ்வுரு வரிசையில் உருக்கள் ஏதோவொரு கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி, இரு வெற்றிடங்களுக்கும் வரவேண்டிய உருக்கள் முறையே,



(1)  (2)  (3) 


(14) சுனில் தனது வீட்டிலிருந்து கிழக்குத் திசை நோக்கி 400m தூரம் சென்று தன்னுடைய இடது கைப்பக்கத்திற்குத் திரும்பி 400m தூரம் பயணம் சென்றான். அவன் மீண்டும் தனது இடது கைப்பக்கத்திற்குத் திரும்பி 400m தூரத்திலுள்ள அனிலின் வீட்டிற்குச் சென்றான். அதன்படி, சுனிலின் வீடு அமைந்திருப்பது அனிலின் வீட்டிற்கு,

(1) தெற்குத் திசையில் (2) கிழக்குத் திசையில் (3) வடக்குத் திசையில்

(15) 


மேற்படி, மூன்று அட்டைகளிலும் உள்ள உரோம எண்குறிகளை ஏறுவரிசைப்படி வைத்தால் உருக்கள் அமையும் ஒழுங்கு,

(1)  (2)  (3) 


(16) 

இக்கார்ட்போர்ட் அட்டையிலிருந்து வெட்டி எடுக்கக்கூடிய நிழற்றப்பட்டுள்ள முறையிலான முக்கோண வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 16 (2) 12 (3) 10

(17) சீதாவின் வயது 6 ஆகும். மாலாவின் வயது சீதாவின் வயதின் மூன்று மடங்காகும். சித்ரா மாலாவை விட 5 வருடங்கள் மூத்தவர். அதன்படி சித்ராவின் வயது.

(1) 26 (2) 20 (3) 23


(18) 


இவ்வுருவிலுள்ள இரு வட்டங்களுக்கும் பொதுவான ஆங்கில எழுத்துக்கள்,

(1) A, D (2) B, E (3) C, F

kalvi.lk

சுட்டெண்:........................................

(19) 

இவ்வடிவிலான சுவர்கள் மூன்றைக் கட்டுவதற்குத் தேவைப்படும் செங்கற்களின் மொத்த எண்ணிக்கை,


(1) 45 (2) 48 (3) 42

(20) 6 9 4 என மூன்று எண்கள் எழுதப்பட்டுள்ள மூன்று கார்ட்போர்ட் அட்டைகள் உருக்களினால் காட்டப்பட்டுள்ளன. இம்மூன்று கார்ட்போர்ட் அட்டைகளையும் ஒன்றுக்கொன்று அருகில் வைப்பதன் மூலம் அமைத்துக்கொள்ளக்கூடிய மிகப்பெரிய எண்ணில் நடுவில் வரும் இலக்கம்,

(1) 9 (2) 6 (3) 4

(21) குறித்த காணியொன்றைச் சுற்றி மூன்று மீற்றருக்கு ஒரு கம்பித்தூண் வீதம் கம்பித்தூண்கள் நடப்பட்டுள்ளன. அதன்படி, 1 ஆவது கம்பித்தூணிலிருந்து 13 ஆவது கம்பித்தூண் வரையிலான தூரம்,

(1) 39m (2) 33m (3) 36m

(22) 



பாத்திரம் A கொள்ளும் நீரின் அளவு 300ml ஆகும். A பாத்திரத்தை முழுமையாக நீரில் நிரப்பி B பாத்திரத்திற்கு இரண்டு தடவைகள் ஊற்றியபோது, பாத்திரம் B யில் $\frac{1}{2}$ பங்கு நீர் நிரம்பியது. அதன்படி, B பாத்திரம் கொள்ளும் நீரின் அளவு,



(1) 1200ml (2) 600ml (3) 900ml


(23) "அன்னாசி நான் மிக அதிகமாக விரும்பும் பழங்களில் ஒன்றாகும்." அதன்படி, பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) மாம்பழம் நான் மிக அதிகமாக விரும்பும் பழங்களில் ஒன்றாகும்.
(2) நான் மிக அதிகமாக விரும்பும் பழம் அன்னாசி மட்டுமேயாகும்.
(3) நான் மிக அதிகமாக விரும்பும் வேறு பழங்களும் உள்ளன.


(24) 1, 2 ஆகிய உருக்களுக்கு இடையிலான தொடர்பின்படி, 3 ஆவது உருவிற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.





(1) 
(2) 
(3) 

(25) 

இக்கதவைத் திறக்கப் பொருத்தமான சாவியைத் தெரிவு செய்க.

(1) 
(2) 
(3) 

*** கடையொன்றில் ஒவ்வொரு வகையிலும் உள்ள பழங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. அதன்படி, இலக்கம் (26), (27) ஆகிய வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்க.**




| அம்புக்குறிகளினால் காட்டப்படும் கருத்து, | |
|---|---|
| குறைவு ⟶ அதிகம் | அதிகம் ⟵ குறைவு |

(26) கடையில் அதிகமாக இருக்கும் பழவகை,

(1) அன்னாசி (2) பப்பாசி (3) தோடை

(27) கடையில் குறைவாக இருக்கும் பழவகை,

(1) பப்பாசி (2) தோடை (3) அன்னாசி

(28) 


இச்சதுரமுகியின் எல்லா எதிர்ப்பக்க இலக்கங்களின் கூட்டுத்தொகை 7 ஆகும். அதன்படி, பக்கம் A இற்கும் அதன் எதிர்ப்பக்கத்திற்கும் பொருத்தமான எண்கள்,


(1) 5 உம் 2 உம் (2) 4 உம் 5 உம் (3) 3 உம் 4 உம்

kalvi.lk

(29) பின்வரும் சொற்கள் ஒழுங்குமுறைக்கேற்ப எழுதப்பட்டுள்ளது. அதன்படி, வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்,

**மில்லிமீற்றர் → சென்றிமீற்றர் → மீற்றர் → ..............................**




(1) 100 மீற்றர் (2) கிலோமீற்றர் (3) 1000 மீற்றர்


(30) 


இவ்வுருவில் வட்ட வடிவக் கம்பிச்சட்டகம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. இக்கம்பிச்சட்டகத்தின் சரிநடுவே E எனக் குறிக்கப்பட்டுள்ளது. எறும்பொன்று B யிலிருந்து A, E மற்றும் C ஊடாக D வரை பயணித்தது. அதன்படி, எறும்பு பயணித்த மொத்தத் தூரம்,

(1) 28cm (2) 30cm (3) 24cm

(31) பின்வரும் மூன்று உருக்களிலும் வித்தியாசமான உரு,

(1)  (2)  (3) 

(32) 

ஒரேயளவான சதுரமுகிகள் மூன்று ஒன்றுடன் ஒன்று ஒட்டப்பட்டதன் மூலம் இத்திண்மம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இத்திண்மத்தில் எமக்குப் புலப்படாத முகங்களின் எண்ணிக்கை,

(1) 5 (2) 4 (3) 3

(33) ஐந்து வருடங்களுக்கு முன் ஆசிமின் வயது 7 ஆகும். அதன்படி, இன்னும் 6 வருடங்களில் ஆசிமின் வயது,

(1) 18 (2) 20 (3) 16

(34) 

இவ்வுருவிற்கு மிகவும் பொருத்தமான சொற்கள் மூன்றினைக் கொண்ட விடை,

(1) அரிசி – வருமானம் – தொழில் (2) கிராமம் – வாவி – மண்வெட்டி


(3) சேறு – நீர் – நாற்று

(35) 2 , .......... , 12 , .......... , 22

எண்கோலமொன்றை அமைப்பதற்கு இரு வெற்றிடங்களுக்கும் எழுதக்கூடிய இரண்டு எண்கள் முறையே,

(1) 8 , 19 (2) 7 , 17 (3) 9 , 18

(36) பிள்ளையொன்று A, B, C, D, E ஆகிய உருக்களினால் காட்டப்பட்டுள்ள திசைகளுக்கு 10m வீதம் ஒழுங்குமுறையே பயணித்தது.




அப்பிள்ளை முதலாவதாகப் பயணித்தது கிழக்குத் திசைக்காகும். அதன்படி, அப்பிள்ளை தற்போது இருப்பது பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து,



(1) 50m தூரத்தில் (2) 10m தூரத்தில் (3) 20m தூரத்தில்

(37) சிவாவிடம் சம அளவிலான முக்கோண வடிவக் கார்ட்போர்ட் துண்டுகள் 25 உள்ளன. 7 நான்முகிகளை அமைத்துக்கொள்வதற்கு அவனுக்கு இன்னும் தேவைப்படும் முக்கோண வடிவக் கார்ட்போர்ட் துண்டுகளின் எண்ணிக்கை,

(1) 3 (2) 2 (3) 1

(38) 2 இற்கும் 27 இற்கும் இடைப்பட்ட 4 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய எண்களின் எண்ணிக்கை,


(1) 5 (2) 6 (3) 7


(39)  


மேற்படி, தொடர்புகளின்படி,  - இவ்வுரு சமமாவது,

(1) 8 முக்கோணங்களுக்கு (2) 4 முக்கோணங்களுக்கு (3) 6 முக்கோணங்களுக்கு

(40) கீழே காட்டப்பட்டுள்ள முக்கோணம், வட்டம் மற்றும் செவ்வகத்தினுள் உள்ள எண்களைப் பரிசீலித்துப் பார்க்குக.








அதன்படி, செவ்வகத்திற்கு மாத்திரம் உரித்தாகும் எண்,

(1) 4 (2) 9 (3) 2

kalvi.lk